**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 210/2023**

**Prosecution witness : அ.சா.6** **Date : 05.02.2025.**

| | |
|---|---|
| **Name : முனுசாமி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் கனிக்கனூரில் குடியிருந்து கோழிபன்னை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 12.10.2022 ம் தேதியன்று மாலை 6 மணிக்கு ஈச்சர் வண்டியில் டிரைவர் உட்பட ஐந்து பேர் ஐ.பி. கம்பெனியில் கோழி பிடிப்பதற்காக வந்து பின்னிட்டு கோழியை பிடித்து விட்டார்கள். பிறகு ஈச்சர் வண்டியில் ஏற்றிய பின்னர் எச்.டி. மின்சார லைனுக்கு அடியில் வாகனத்தை நிறுத்தி கயிறு கட்டிக் கொண்டிருந்தார்கள். அப்போது மேலே நின்று கொண்டு கயிற்றை கட்டிய நபருடைய தலை மீது மின்சார கம்பி பட்டு மின்சாரம் கம்பி வழியாக பாய்ந்து கீழே நின்று கொண்டிருந்த ஒரு நபர் மீது மின்சாரம் தாக்கி போகும் வழியில் இறந்துபோய்விட்டார். சம்பவ சமயத்தில் மழை பெய்து மழை ஈரமாக இருந்தது.

2) மேலே கயிறு கட்டிக் கொண்டிருந்த நபர் கீழே விழுந்து அவருக்கு காயம் ஏற்பட்டது. அடிப்பட்டவரை கோழி வண்டியிலேயே அழைத்துக் கொண்டு ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தார்கள். இந்த விபத்திற்கு காரணம் ஈச்சர் லாரியின் ஓட்டுநர் கவனக்குறைவாக மின்சார கம்பிக்கு அடியில் நிறுத்தியதாலும், நான் மேலே செல்லக்கூடாது என்று சொன்ன பின்னிட்டும் மேலே சென்றதால் விபத்து நடந்தது. சம்பவம் நடந்து

இரண்டு நாட்கள் கழித்து போலீசார் சம்பவயிடம் வந்து சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் மற்றும் சுப்பிரமணி இருவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பார்வை மகஜர் **அ.சா.ஆ–2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

3) இந்த விபத்து சம்மந்தமாக போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் கோழிபன்னையில் விபத்து நடந்து அன்றும் விபத்து நடந்த மறுதினமும் விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் படித்து காண்பித்தார்கள். தற்போது மறந்துவிட்டது. என்னுடன் கையொப்பம் செய்த மற்ற நபர் எப்போது கையொப்பம் செய்தார் என்றால் என்னுடன் தான் கையொப்பம் செய்தார்.

4) லாரி நிறுத்தி எவ்வளவு நேரம் கழித்து விபத்துமு ஏற்பட்டது என்றால் 3 மணி நேரம் கழித்து வண்டி கிளம்பும் நேரத்தில் விபத்து நடந்தது. விபத்தில் காயமடைந்த கிளினர் மட்டும் தான் ஈச்சர் லாரியின் மேலே இருந்தார். கிளினர் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். கிளினரிடம் லைன் உள்ளது போகாதீர்கள் என்று இரண்டு, மூன்று தடவை எச்சரித்தும் கேளாமல் அவர் ஈச்சர் வாகனத்தில் ஏறியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது. சம்பவ சமயத்தில் நான் எங்கிருந்தேன் என்றால் அருகில் தான் இருந்தேன். 50 அடி தூரத்தில் இருந்தேன்.

5) நான் வேலையை முடித்து வீட்டிற்கு கிளம்பும் போது தான் விபத்து நடந்தது. போலீசார் விசாரிக்கும் போது நான் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் நான் சென்ற பிறகு விபத்து நடந்ததாக சொன்னார்கள். உடனடியாக திரும்ப வந்துவிட்டேன். சம்பவத்தை நான்

நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சத்தம்கேட்டு கீழே விழுந்தவுடன் தான் வந்து பார்த்தேன்.

6) மற்றவர்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தனர் என்றால் வண்டி அருகில் 2, 3 அடி தொலைவில் இருந்தனர். எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.